**கடற்றொழில் நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு**
**கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஆரம்ப தரத்தின் அரை தொழில்நுட்ப சேவை வகுதியின் இயந்திர நுட்பவியலாளர் பதவியில் III ஆம் தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு உள்ளக விண்ணப்பக்காரர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரல் (மட்டுப்படுத்தப்பட்ட).**

இத்திணைக்களத்தில் நிலவும் ஆரம்ப தரத்தின் அரை தொழில்நுட்ப சேவை வகுதியின் இயந்திர நுட்பவியலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் இத்திணைக்களத்தின் ஆரம்பதரநுட்பவியலாளர் அல்லாத சேவை வகுதியில் கடமை மேற்கொள்கின்ற தகைமைகளைக் கொண்ட ஊழியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2018.09.21 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ ''பணிப்பாளர் நாயகம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் த.பெ.இலக்கம் 13, பேராதனை'' எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் தபாலிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ''இயந்திர நுட்பவியலாளர் பதவியின் பொருட்டு விண்ணப்பம் (மட்டுப்படுத்தப்பட்ட)'' எனும் சொற்றொடரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

01. பதவி : இயந்திர நுட்பவியலாளர் III
இந்தப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.
*குறிப்பு* : ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு அமையவாகும்

02. மாதாந்த சம்பளத் திட்டம் : ரூபா. **25,250-10x270-10x300-10 x330- 12 x350 - 38,450/-( PL-2 -2016)**
(சம்பளம் வழங்கப்படுவது, பொ.நி.சு.இலக்கம் 03/2016 இன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமையவாகும்)

03. கல்வித் தகைமைகள் : க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது திறமைச் சித்திகள் இரண்டுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்

04. தொழிற் தகைமைகள் : மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றில் இருந்து தேசிய தொழிற் தகைமையில் (N.V.Q) இரண்டாவது அல்லது மூன்றாவது மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் இயந்திர நுட்பவியலாளர் தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்

05. அனுபவம் : இயந்திர நுட்பவியலாளர் தொடர்பாக 02 வருட சேவை அனுபவம் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நிறுவனம் ஒன்றில் இருந்து பெற்றிருத்தல் வேண்டும். அவ்வனுபவத்தை சான்றிதழின் ஊடாக சான்றுபடுத்தல் வேண்டும்.

06. உடற்தகைமை : நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்யக் கூடியதாக உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

07. ஏனைய தகைமைகள்

i. கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் அரம்ப தரத்தின் தொழில்நுட்பவியலாளரல்லாத பதவியின் கீழ் 05 ஆண்டுகள் சேவைக் காலத்தை பூரணப்படுத்தியுள்ளதுடன் பதவி உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதன் பொருட்டு தேவையான தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பகாரர் சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளையும் 2018.09.21 ஆம் திகதிக்கு சகல விதத்திலும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

08. ஆட்சேர்ப்பு முறை : தொழிற் பரீட்சிப்பு பெறுபேற்றிற்கு அமையநிலவும் வெற்றிடங்களில் 50% நிரப்பப்படும் தொழிற் பரீட்சிப்பின் போது சித்தியடையும் புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பகாரர்களுள் திறமை அடிப்படையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்புச்செய்யப்படும்.

*** தொழிற் பரீட்சிப்பின் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாரு புள்ளிகள் வழங்கப்படும் ***

| | விடயம் | உச்ச புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| I | உரிய துறையில உள்ள ஆரம்பத் தகைமைகள் | 20 | 40% |
| II | உபகரணங்களை பொருத்துதல், புதுப்பித்தல் தொடர்பான அறிவு | 20 | |
| III | உரிய துறையில் உபகரணங்களின் இடையூறுகளை இனங் காண்பதற்கான அறிவை கொண்டிருத்தல் | 40 | |
| IV | உரிய துறையில உரிய உபகரணங்களை பயன்படுத்துதல் தொடர்பான அறிவு | 20 | |

09 சேவை நிபந்தனைகள்

i. நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர் அரசாங்க கொள்கைத் திட்டங்களுக்கும், அரசாங்க சேகைள் அணைக்குழுவின் கட்டளைகளுக்கும், நடைமுறை ஒழுங்குவிதி, தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள், நிதிப்பிரமானம் மற்றும் அரசாங்கத்தினல் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற பிரமானங்கள் ஒழுங்கு விதிகள், அமைச்சு மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டவராவர்.

ii. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுத்தப்படுவர். அரசாங்க சேவையில் பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் பெறுவாரேயாயின் அவர் ஒரு வருட கால பதில் கடமை காலப் பகுதிக்கு உட்படுத்தப்படுவர். திறந்த போட்டிப் பரீட்சையின் ஊடாக நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் உரிய முதலாவது தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழி மூலத்திற்கும் மேலதிகமாக, இரண்டாம் மொழி தொடர்பிலான தேர்ச்சியை சேவைக்கு ஈர்ப்புச் செய்யப்பட்டு 05 வருடத்தினுள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

iv. திணைக்களத்தின் ஊடாக தீர்மானிக்கின்ற சேவை நிலையத்தில் கடமையை மேற்கொள்வதற்கு இணங்குதல் வேண்டும்.

v. விண்ணப்பக்காரர் உரிய விண்ணப்பங்களை உரிய பணிப்பாளரின் ஊடாக சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

vi. உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் அடிப்டைத் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் யாவும் அறியத் தராமலேயே நிராகரிக்கப்படும்.

vii. இந்த வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் பிரச்சினை ஏற்படுமாயின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கின்ற அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும்.

டாக்டர் நிஹால் வெதசிங்க
கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகம்
திகதி : 2018.08.**16**
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
த.பெ.இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை.